1974 மார்ச் 6

Periakulam tank

* 303 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government are aware of the non-availability of water at the Periakulam lake in Srivilliputhur area for the past many years;

(b) if so, whether the Government are aware of the letters appearing in the Mail of Madras around 21st October 1974; and

(c) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம்.

(இ) ஆம்.

(உ) திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் "அழகராணை திட்டம்" ஆய்வு முடிவில் உள்ளது. இத் திட்டத்தின் மதிப்பீடு சுமார் 8 கோடி ரூபாய்களாகும். இத்திட்டம் செயலாக்கப்பட்டால் ஏராளமான குளங்கள் பயனடையும். பெரியகுளம் கண்மாயிக்கு இத் திட்டத்தால் உறுதியாக தண்ணீர் கிடைக்கும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இவ்வித நிலைமைகள் மூலம் விவசாயிகளுக்கும் பல கஷ்டங்கள் ஏற்படு கின்றன. விவசாய உற்பத்தியும் பாதிக்கப்படுகின்றது. ஆதலால், இவ்வித நிலைமையை உடனடியாகப் போக்க, துரித நடவடிக்கை எடுக்க அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசுக்கு வந்ததற்குப் பிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

கோவை நகரில் அலுவலகக் கட்டடங்கள்

* 304 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் மாநில அரசின் பல்வேறு இலாகாவிற் காக சொந்த கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவசம் என்ன?